[1971 ஜூன் 23

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, இன்னும் குறிப்பிடத்தக்க அளவில், நின்று கொண்டு பிரயாணம் செய்வது அசௌகரியமாக இருக்கிறது என்று ஒரு பெடிஷன் கூட பொதுமக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்திருப்பதாக தெரியவில்லை. அது மட்டுமல்லாமல், இப்போது அந்தப் பஸ்கள் மிக நெரிசல் நிறைந்த பகுதியில் மட்டும் விடுமாறும், ஷார்ட் டிரிப்பிற்கு மட்டும் விடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. கொஞ்சம் நீண்ட தூரம் போகவேண்டிய இடத்திற்கு அவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்றும் அண்மையில் 14—6—1971 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த பஸ்ஸை ஷார்ட் டிரிப்பிற்குப் பயன்படுத்துவதாலும், நெரிசல் நிறைந்த பகுதியில் பயன்படுத்துவதாலும், அது நெரிசலைக் குறைக்கப் பயன் உள்ளதாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். முகம்மது காதர் மூகைதீன் : தலைவர் அவர்களே, பஸ்களிலே பிரயாணம் செய்யக்கூடிய எம்.எல்.ஏ.-க்களுக்கு அனுமதி அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அவ்வாறு அனுமதி கொடுக்கும்போது, தூர பஸ்களிலேயும், டவுன் பஸ்களிலேயும், எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-களுக்கு என்று இரண்டு சீட்டுகள் ரிசர்வ் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு: இப்பொழுதே இருக்கிறது.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே துரித வண்டிகளில் அந்தவிதமான வசதி, முன்னரே தெரிவித்துவிட்டால், செய்யப்படுகிறது. நான் குறிப்பிட்டது இலவசமாகப் பிரயாணம் செய்வது பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) வெட்டுத்தீர்மானங்கள் கொடுப்பதற்கான காலநீட்டிப்பு குறித்து.

MR. SPEAKER : I have to announce to the House that the time for receipt of cut motions in regard to Demands 1 to 25 has geen extended till 3 p.m. on 24th June 1971.

3. நடைமுறைக் கேள்வி.

மத்திய விஞ்ஞான-தொழில் ஆராய்ச்சி நிலையத் தொடக்க விழாவிற்கு அமைச்சர்களுக்கு அழைப்பு அனுப்பாதது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order under Rule 83 The Hon. Chief Minister while making a statement yesterday submitted to this House that he had not been invited for a particular function organised by the CSIR—Council of Scientific and

Industrial Research—and that the hon. Member Thiru Rama Arangannal also had not been invited. Subsequently we hear reports that thef were invited and that there was an attempt to contact the Personal Assistant to the Chief Minister and see that the Chief Minister was also persuaded to come to the function. Is the informaion given by he Chief Minister correct or that given by the CSIR correct? Will the Hon. Chief Minister tell us which is the exact position with regard to the clarification that he had made while the hon. Member Thiru Arangannal was speaking.

MR. SPEAKER : It is not a point of order.

DR. H. V. HANDE : My point of order is this. The matter was discussed in the House. There is a sort of provision for us to elicit information in relation to the business before tse House. The Hon. Chief Minister is not going to reply immediately. He will be giving his reply a little later. A point of order may be raised in relation to the business before the House. I request the Hon. Chief Minister to make a statement under Rule 82. That is my point.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக்காட்டியது போல, என்னை நேரிடையாகவோ அல்லது வேறு வழியிலோ சந்தித்து, அந்த விழாவிலே கலந்துகொள்ள வேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. அவர்கள் கூறியது போல, ஒரு வேளை என் தனிச் செயலாளரைச் சந்தித்திருக்கக் கூடும். அதைப் பற்றி இனிமேல்தான் நான் விசாரிக்க வேண்டும். அப்படி விசாரிப்பது இருக்கட்டும். ஒரு நாள் என்னைக் காண முடியாவிட்டாலும், மறு நாள் கண்டிருக்கலாம். உடல் நலம் சரியில்லாமல் இருந்தாலும், மத்திய அமைச்சர் ஒருவர், மாநில அரசால் கொடுக்கப்பட்ட ஒரு இடத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை தொடங்கி வைக்கும்போது, முதல் அமைச்சர் இல்லாவிட்டாலும், அடுத்து இருக்கும் மற்ற அமைச்சர்கள் யாரையும் அழைக்கவில்லை. அப்படி அழைக்க முயற்சி எடுத்ததாகவும் தெரியவில்லை. சென்னையிலேயே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரையும் அழைக்கவில்லை. இதைத்தான் நான் எடுத்துக் காட்டினேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. என். எஸ். வி. சித்தன், (2) திரு. பி. கே. மூக்கையா தேவர், (3) திரு. அ. லெ. சுப்பிரமணியம் ஆகிய மூவரும் இப்பேரவையின் உறுப்பினர்களாக இல்லாத காரணத்தால், பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் 22—8—1972 வரை நிரப்பப்பட வேண்டிய மூன்று